RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s236

OPEN ACCESS

# வைணவ அந்தாதிகளில் பக்திநெறி

## இரா. ஸ்ரீபிரியா [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, இ.மா.கோ. யாதவர் மகளிர் கல்லூரி, மதுரை-14, தமிழ்நாடு, இந்தியா

# Bhakti norms in Vainava Anththies

## R. Sripriya [a, *]

[a] Department of Tamil, EMG Yadava Women's College, Madurai-14, Tamil Nadu, India

* Corresponding Author: sripriyaprabu1982@gmail.com

Received: 04-01-2021
Revised: 14-04-2021
Accepted: 17-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

Bhakti Norms and Gods worship methods are sketched and narrated clearly with Vainava Religions Concepts in Vainava Anthathies literature. On Depending of the first three Vainava Anthathies, Vainava Bhathi principles and Divine theories are explained in this articles (Bhakti Norms in Vainava Anthathies (On Depending of first three Vainava Anthathies). The Aim and objectives of this articles is to find out the Bhakti Norms in Vainava Anthathies with Special reference of first three Vainava Anthathies. In this articles Mythological Approach, Descriptive Criticism and Analytical Criticism are followed.

**Keywords:** Administration, Politics, Welfare State, Good Governance, Democracy.

## முன்னுரை

வேதங்கள், இதிகாசங்கள், புராணங்களில் கூறப்பெற்றுள்ள சிவன், திருமால் ஆகியோரது இறைத்தன்மையைப் பக்திநெறியில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தேவாரமாகவும், நாலாயிரத் திவ்யப் பிரபந்தமாகவும் பாடியமையால் ‘இந்து சமயம்’ தமிழ்நாட்டில் புதுமையான பொலிவுடன் வளர்ந்தது. தமிழ்நாட்டில் தோன்றிய வைணவ ஆழ்வார்களும் வைணவ இறைவடியார்களும் அருளிச்செய்த வைணவ அந்தாதிகளில் கூறப்பெற்றுள்ள சமயக் கருத்துக்களும் பக்திநெறிகளும் வேத, இதிகாச, புராணங்களில் சொல்லப்பட்டவையே ஆகும். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் பாடிய முதல் மூன்று திருவந்தாதிகளை முன்வைத்து வைணவ அந்தாதிகளில் காணப்படும் வைணவப் பக்தி நெறியை ஆராய்வதாக இந்த ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

## வைணவ அந்தாதிகளில் இறையனுபவம்

வைணவ அந்தாதிகளில் திருமாலின் பரத்துவ நிலையே பாடப் பெற்றுள்ளன. பக்தி அனுபவமும் ஞான அனுபவமும் வைணவ அந்தாதி களில் பரவலாகக் காணப்படுகின்றன. இறையனுபவத்தை இறைவட்டத்தில் நின்று பாடிய அந்தாதி ஆசிரியர்கள் திருமாலின் திருவடிப் பெருமைகளைக் கூறுதல், திருமாலின் திருநாமங்களைப் பாடி மகிழ்தல், திருமாலின் வடிவழகைக் கூறி அனுபவித்தல், திருமாலின் திவ்ய தேசங்களின் வளங்களைப் பாடி அனுபவித்தல் எனப் பலவகைப்பட்ட இறையனுபவங்களின் வெளிப்பாடுகள் அந்தாதிகளில் காணப்படுகின்றன.

அந்தாதிப் பாடல்களில் வைணவ மரபில் திருமாலிடம் ஆன்மாக்கள் கொண்டுள்ள உறவும் அன்புப் பிணைப்பும் நாயகன் - நாயகி பாவனையில் பேசப்பெற்றுள்ளன. இறைவனைக் கூடுவதிலுள்ள உயிர்த்துடிப்புக்களை முதல் மூன்று ஆழ்வார்களின் அந்தாதிகள் வெளிப்படுத்துகின்றன.

## திருமாலின் திருவடிப் பெருமைகளின் வெளிப்பாடுகள்

பொதுவாக ஆழ்வார்கள் இறைவனாகிய திருமாலுடன் கூடி இருப்பதனால் உலகத் துன்பங்கள் அனைத்தும் மறையும் என்றும், அன்புவழி மரபு அனைவர்க்கும் உரியதென்றும் உறுதியாக நம்பியவர் அவர்கள் இறைவனின் திருவடிப் பேற்றை அடைவதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட வர்கள். பொய்கையாழ்வார், "அவன் தலைவன் - நாம் அடிமை என்னும் மனத்தெளிவு உடையவர்களது மனமானது, பெரிய பசுக்கூட்டத்திடையே தன் தாயைத் தேடிக் கொண்டு செல்கின்ற கன்றைப்போல எம்பெருமானுடைய திருவடிகளையே விரும்பித் தானே சென்றடையும்" எனப் பாடியுள்ளார். பூதத்தாழ்வார்,

"மறையோர்க் கீந்த மணிவண்ணன் பாதமே

நீமறவேல் நெஞ்சே நினை"

என்றும்,

"மதிக்கண்டாய் நெஞ்சே மணிவண்ணன்

பாதம்

மதிக்கண்டாய் மற்றவன் பேர்தன்னை -

மதிக்கண்டாய்"

எனப் பாடியுள்ளார். இவ்வாறு பூதத்தாழ்வார் தன் உள்ளத்திற்குத் தானே உபதேசிப்பதைப் போலக் கூறி, வைணவத்தை நாடும் பக்தர்களுக்கு ஞானத்தை ஊட்டுகின்றனார். "இரும்புண் ணீரினும் மீட்டற் கரிதென" புறநானூறு கூறுவதைப் போன்று, எவனொருவன் திருமாலின் திருப்பாதங்களைச் சரணாகதி அடைகின்றானோ அவன் மனத்தில் திருமால்குடி கொள்வான்; இவ்வாறு இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவனை எந்தநோயும் வருத்தாது என்பது வைணவம் வலியுறுத்தும் 'பிரபக்தி' நெறியாகும்.

இவ்வாறு உலகத்தாரைப் பார்த்துத் திருமாலிடம் சரணடைய வேண்டுதலும், அதனால் விளைகின்ற பயனைக் கூறுதலும், பின்னர் தன்னைச் சரணடையுமாறு தன் நெஞ்சிற்குக் கூறுதலும், பின்னர் தானே திருமாலிடம் சரணடைந்ததும் எனக் கூறுவதன் வாயிலாக திருமாலின் திருவடியின் பெருமைகளை பக்தர்களுக்கு உணர்த்துதல் முதல் மூன்று ஆழ்வார்களின் திருவந்தாதிகளின் நோக்கங்களாக உள்ளன.

## திருமால் திருநாமங்களின் மேன்மைகள்

ஆழ்வார்கள் உணர்ச்சிகளின் அடிப் படையில் இறைவனிடம் அன்பு செலுத்தியவர்கள்; இந்த அன்பினால் இறையருளைப் பெற்று உலக மக்களுக்கு வழங்கியவர்கள். ஆழ்வார்கள், சேக்கிழாரைப் போல அன்பு வழியில் இறைவனுக்கும் அவனது அடியவர்க்கும் தொண்டு செய்ய விரும்புகின்றனர். ஆழ்வார்கள் தன்னிலும் உலகப் பொருட்களிலும் நாராயணனையே கண்டனர். உயிர் உடலை இருப்பிடமாகக் கொண்டிருப்பதைப் போன்று நாராயணன் இந்த உலகத்தையே தன் இருப்பிடமாகக் கொண்டவன் நாராயணன் என்னும் கொள்கையில் உறுதி கொண்டவர்கள் ஆழ்வார்கள்.

'நாராயணன்' என்பது எட்டெழுத்து மந்திரமாகும். பரத்துவ நிலையில் இது எம்பெருமானைக் குறிக்கும். ஆழ்வார்கள் திருமாலின் திருநாமங்களை வேதத்திற்கு இணையானதாகக் கொண்டனர். எம்பெருமானை ஏத்துவதற்கென்று படைக்கப் பட்ட நாவினைக் கொண்டு, திருமாலை ஏத்தாமல்

பயனற்றவற்றை பேசுவதற்கு நாவினைக் கருவியாகப் பயன்படுத்தி உலகத்தார் வீணே துன்பப்படுவதாக பொய்கையாழ்வார் இரக்கம் கொள்கின்றார்.

திருமாலை வாய்விட்டுப் புகழ்வதற்கேற்ற காலம் நிறையவே உள்ளது. ஆயினும் உலகத்தார் வீணாகப் பொழுதைக் கழித்து நரகத்தை அடைவது ஏன்? என பூதத்தார்வார் வினவுகின்றார்.

"தாமுளரே தம்முள்ள முள்ளுளதே

தாமரையின்

பூவுளதே யேத்தும் பொழுதுண்டே - வாமன்

திருமருவு தாள்மருவு சென்னியரே

செவ்வே

அருநரகம் சேர்வ தரிது"

என்பது அப்பாடலாகும். இறைவனின் திருநாமங்களைக் கூறி வழிபட்டால் நரகத் திலிருந்து விடுபடலாம் என்பது பூதத்தாழ்வாரின் பக்திநெறி வெளிப்பாடாகும்.

இறைவன் மீது அன்பு பெருகி அதனால் மனங்கசிந்து கண்ணீர்வடித்து அவனை நினைத்துக்கொண்டே இருத்தலும், அவனது பல திருநாமங்களைக் கூறுதலும், அவனைத் தன் உயிராக ஏற்றலும், இவற்றினால் தன்னை இறைவனுக்கு பிடித்தமானவனாக்கி இறைவன் அருளைப் பெறுதலும் வைணவப் பக்திநெறி என முதல் மூன்று ஆழ்வார்களின் திருவந்தாதிப் பாடல்கள் காட்டுகின்றன.

'கண்ட கண்ட தேவதைகளின் கால்களி லெல்லாம் விழுகின்ற அறிவுக் கோடர்களே!' வேதமோதுவது நல்லது; அதைச் செய்யும் சக்தி அற்றவர்கள் திருமாலின் திருநாமங்களைக் கூறுவதே வேதங்களின் சாரமாகும் "மாதவன் பேர் சொல்வதே வேதத்தின் சுருக்கு" எனப் பூதத்தாழ்வார் கூறுகின்றார். பூதத்தாழ்வார் திருமாலின் திருநாமங்களைச் சொல்லுவதும் வேதத்தை ஓதுவதும் பக்தியை வளர்க்கும் சிறந்த சாதனம் என்கின்றார்.

ஒருநாளும் அழிவில்லாதவனாகிய திருமாலுக்கு ஆட்பட்டு மறவாமல் அவன் திருநாமத்தை வாழ்த்த வேண்டும். இவ்வாறு வாழ்த்துவதனால் கழிந்த நாட்களும், இனிமேல் வரப்போகும் நாட்களும், நிகழ்காலமும் நல்ல காலங்களாகும் என்கின்றார் பேயாழ்வார்.

"சென்றநாள் செல்லாத செங்கண்மா

தலங்கள்மால்

.... .... .... .... .... ....

.... .... .... .... .... ....

மறவாது வாழ்த்துகவென் வாய்"

என்பது அப்பாடலாகும். மேலும் பேயாழ்வார் திருமால் திருநாமத்தை உலகத்தார் ஒன்றுகூடிப் போற்ற வேண்டும் என்பதைப் "புவியினர் போற்றியுரைக்கப் பொலியுமே" என்கின்றார்.

முதலாழ்வார் மூவரும் தாம் பெற்ற இறைப்பயனை உலகமக்களும் பெற வேண்டுமென நினைக்கின்றனர். உலகமக்கள் நற்கதியடைவதற்கும், வேதத்தை அறிந்து கொள்வதற்கும், வாழ்நாள் நீட்சிக்கும், கூற்றுவனும் கொடிய பாவங்களும் தீச் செயல்களும் அணுகாமல் இருப்பதற்கும் திருமாலின் திருநாமத்தை வாயார வாழ்த்த வேண்டுகின்றனர்.

## திருமாலின் வடிவழகின் பெருமைகள்

ஆர்வார்களும் வைணவ அடியார்களும் திருமாலின் நின்ற திருக்கோலம், இருந்த திருக்கோலம், கிடந்த திருக்கோலம் ஆகியன வற்றை ஒன்றமதித்துப் பக்தியைச் செலுத்தினர். "பொங்கி

அலையெறியும் கடல் போன்ற எம்பெருமானது அழகிய திருக்கைகளில் சாரங்க வில்லினையுடைய நாண் உராய்ந்ததனால் உண்டான காய்ப்பு உள்ளது. திருவடிகளில் சகடத்தை உதைத்ததனால் உண்டான காய்ப்பு இருக்கின்றது. இரணியாசுரனுடைய மார்பைக் கிழித்து எறிந்ததனால் உண்டான காய்ப்பு விரல்களில் இருக்கின்றது" எனத் திருமாலின் உறுப்புக்களை விளக்குவதன் வாயிலாக திருமாலின் நரசிங்க அவதாரத்தைக் கூறுகின்றார் பொய்கையாழ்வார்.

திருவடிகளை உயரத் தூக்கியவனும் 'நமுசி' முதலானவர்கள் நடுங்கும்படியாக உதட்டை மடித்துக் கடித்துக்கொண்டு பார்க்கின்ற பார்வையிலேயே தனது எதிரிகள் சுருண்டு விழும்படிக் கண்கள் வட்டமிட, நெருப்பை உமிழ்கின்ற திருவாழியை அணிந்தவனுமாகிய திருமாலினுடைய தாமரைமலர் போன்ற திருவடிகளைத் தஞ்சம் அடைந்தவர்கள் பரமபதத்தை அடைவார்கள்[10] எனப் பூதத்தாழ்வார் பாடுகின்றார்.

கரிய பெரிய மேகத்தைப் போன்ற வடிவத்தை உடையவனும், கரிய கடல்நீரின் நிறத்தைக் கொண்டவனும், நீலமணி போன்றவனுமான திருமாலின் அழகை ஆராய்ந்து நோக்கு மளவில், திருக்கால்கள் தாமரை மலர் போன்றவை; திருக்கைத் தலங்களும் அத் தாமரை மலர் போற்வையே; உலகளந்த திருவடியும் அத்தாமரை மலர் போன்றவையே எனப் பாடுகின்றார் பேயாழ்வார்.

*"கண்ணுங் கமலங் கமலமே கைத்தாரும்*

*மண்ணளந்த பாதமும் மற்றவையே"*

என்பது அப்பாடலடிகளாகும். திருவேங்கட மலையின் வளத்தைப்பாடும் பூதத்தாழ்வார்,

"பெருகு மதவோம் மாப்பிடிக்கு முன்நின்று

இருகண் இளமூங்கில் வாங்கி - அருகிருந்த

தேன்கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர்"

எனத் திருவேங்கடமலையின் வளத்தைப் பக்திப் பெருக்கோடு பாடியுள்ளார்.

## முடிவுரை

முதலாழ்வார் மூவரும் தமது அன்பினால் இறைநுகர்வுகளை நேரடியாகப் பெற்று அதனை உலகிற்கு அளித்தவர்கள். உணர்ச்சிகளின் அடிப்படையில் இறைவனிடம் அன்பு செலுத்துவதே இவர்களது நோக்கமாகும். பக்தி நெறியையே இறைவனை அடையும் எளிய வழியாக இவர்கள் கூறுகின்றனர். 'அன்பு வழி' என்பது இறைவனுக்கும் இறையடியார்க்கும் தொண்டு செய்வதாகும்.

## References

Bhoothath Alvar, (1973) Second Thiruvanthathi, G.L. Printing house, Kanchipuram, India

Gnanasambathan A.S., (1977) Philosophy and Bhakti, Gemini Press, Kumbakonam, India.

Pey Alvar, (1973) Third Thiruvanthathi, G.L. Printing house, Kanchipuram, India

Poigai Alvar, (1973) First Thiruvanthathi, G.L. Printing house, Kanchipuram, India

Subbureddiyar, N., (1982) Liberation Navalar Art Printers, Chennai, India

Subbureddiyar, N., (1988) Malainaatu Thirupathigal, Navalar Art Printers, Chennai, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License